<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.
2026ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை
<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.469/2024.</u>
<u>சி.என்.ஆர். எண்.TNTU09-006825-2024</u>

வரிசை எண்.	விளக்கம்	விவரங்கள்
1.	குற்றமுறையிடுபவர்	ஜெயந்தி, வயது-46, த/பெ.ஏகாம்பரம், எண்.60ஏ, அய்யாவுத்தெரு, பெருமாள்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர்.
2.	எதிரி	வீரைய்யா, வயது-52 த/பெ.சின்னைய்யா, எண்.37/11, பெரிய வாணியர் தெரு, நடுப்பேட்டை, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.
3.	குற்றம்	138 NI ACT
4.	சம்பவம் நடந்த தேதி	18.09.2024
5.	முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்ட நாள்	12.11.2024
6.	எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்	-
7.	குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்	-
8.	கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்	23.01.2025
9.	கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட	1.22.07.2025 கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் 2698/2025.

	விவரம் அதன் முடிவுகள்.	
10	வழக்கின் சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்	பு.த.சா.1–13.02.2025, 31.07.2025, 12.09.2025, 18.09.2025.
11	எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள்	20.11.2025
12	எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்	–
13	தீர்ப்பு பகரப்பட்ட நாள்	24.06.2026
14	தீர்வு	கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை

<u>நீதித்துறை படிவம் எண். 61</u>

புகார்தாரர் : ஜெயந்தி த/பெ.ஏகாம்பரம்.

எதிரி : வீரைய்யா த/பெ.சின்னைய்யா.

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டனை

தண்டனை: முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.9,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.9,10,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

வரி	எதிரியின்	தந்தை/	சாதி	தொழில்	முகவரி	வயது

சை எண்	பெயர்	கணவர் பெயர்	(அ) இனம்			
1	வீரைய்யா	சின்னைய்யா .	–	–	எண்.37/11, பெரிய வாணியர் தெரு, நடுப்பேட்டை, குடியாத்தம், வேலூர் மாவட்டம்.	52

தேதி							தாமதம் (ம) அதன் விளக்கம்.
குற்றம்	புகார் அறிக்கை	எதிரி கைது செய்யப்பட்ட நாள்	பிணையில் சென்ற நாள்	வழக்கு விசாரணையின் தொடக்கம்	வழக்கு விசாரணையின் முடிவு	உத்தரவு	–
18.09.24	12.11.24	–	–	23.01.25	20.11.25	24.06.26	

இவ்வழக்கு கடந்த 12.11.2024 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 20.11.2025 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.எ.சி.தேவகுமார், பி.எஸ்சி., பி.எல்., திரு.M.செந்தில்குமார், B.A., B.L., திரு.N.சரவணன்,M.A.,BL., திரு.D.நரேஷ்பாபு, B.Sc., B.L., திரு.D.துரைராஜ்., B.A., B.L., திரு.D.கீத்திராஜன், BB.A., LLB., (Hons) அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.உமர்., M.A.,BL., அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவு 138 மற்றும் 141 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வழக்கின் சுருக்கம்

குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமுறையீட்டாளருக்கு நன்கு அறிமுகம் ஆனவராகவும், அந்த வகையில் குடும்ப மற்றும் வியாபார தேவைக்காக கடந்த 2023 செப்டம்பர் மாத முதல் வாரத்தில் ரூ.9,00,000ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதை 6 மாதத்தில் திரும்ப செலுத்துவதாக கூறியதாகவும், கடந்த 18.09.2024ம் தேதி பணத்தை திரும்ப கேட்டபோது 18.09.2024ம் தேதியிட்ட ஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளை. காசோலை எண் 110567 என்ற காசோலையை ரூ.9,00,000/-த்திற்கு கொடுத்ததாகவும் அந்த காசோலையை 18.09.2024ம் தேதி பாரத ஸ்டேட் வங்கி, வாணியம்பாடி கிளையில் வசூலுக்கு செலுத்தியதாகவும், மேற்படி காசோலை குற்றம் சாட்டப்பட்டவரின் வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லை (Funds insufficient) என்று காசோலையானது 19.09.2024ம் தேதி ரிட்டன் மெமோவுடன் திருப்பப்பட்டது என்றும், மேற்படி விவரத்தை 09.10.2024ம் தேதி அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை அனுப்பியதாகவும், அதை 15.10.2024ம் தேதி பெற்றுக்கொண்டு 18.10.2024ம் தேதி தவறான விவரங்களுடன் பதிலறிவிப்பு அனுப்பியதாகவும், மேலும், இது நாள் வரை புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய பணத்தை திரும்ப செலுத்தாமல் காலம் கடத்தி வருவதாகவும், காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளர் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138

ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் பொய் வழக்கு போட்டுள்ளார்கள் குற்றவாளி இல்லை என்று தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>

பு.த.சா.1 குற்றமுறையிடுபவரான ஜெயந்தி தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும் 18.09.2024ம் தேதியிட்டஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளையின் 110567 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/–க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 19.09.2024ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்றும், 09.10.2024ம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது பு.த.சா.ஆ.3 என்றும், 15.10.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.4 என்றும், 18.10.2024 ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு பு.த.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அதனை பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு அவங்க தான் எனக்கு ரூ.34,00,000 தரனும். அதற்கான ஸ்டேட்மென்ட் இருக்கு ஆதாரம் இருக்கு எனவும், ஒரு காசோலை லோன் வாங்கி தருகிறேன் என கூறி 1110597 காசோலை வாங்கினார். மற்றொரு காசோலையை இன்சூரன்ஸ் வாங்கி தருகிறேன் என கூறி வாங்கினார். 1110568 இந்த காசோலையை சௌந்தரராஜனிடம் கொடுத்துள்ளார் ஜெயந்தி எனவும், அவர் தரப்பில்

சாட்சிகள் உண்டு எனவும் கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் கு.சா.த.ஆ.1 மற்றும் கு.சா.த.ஆ.2 சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றமுறையிடுபவர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.

<u>6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

" Affirmanti non neganti incumbit probatio " நிரூபிக்கும் பொறுப்பு குற்றம்சாட்டுபவரிடமே உள்ளது.

7. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:–

7(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.த.சா.ஆ.1 18.09.2024ம் தேதியிட்ட ஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளையின் 110567 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/–க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.2 19.09.2024ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி,

வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசலின் காரணம் **" போதிய பணம் இல்லை "** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.3 09.10.2024ம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது பற்றியதாகும், பு.த.சா.ஆ.4 15.10.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை பற்றியதாகும், பு.த.சா.ஆ.5 18.10.2024 ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு பற்றியதாகும்.

7(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த நீதிமன்றம் புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது ஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளையால் **" போதிய பணம் இல்லை "** என்று திருப்பப்பட்டது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்பதை தீர்மானிக்கிறது.

7(iii).பு.த.சா.ஆ.3 மற்றும் பு.த.சா.ஆ.4னை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அறிவிப்பை பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7(iv). மேலும், அவரது குறுக்கு விசாரணையில் " **திருவண்ணாமலை மாண்புமிகு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் – 1 நீதிமன்றத்தில் cc 162/2022 என்ற வழக்கில் நானும் எனது கணவரும் குற்றவாளிகள் என தீர்ப்பு வந்தது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு கு.சா.த.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** வேலூர் மாவட்டம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள காவல் துறையில் ஏதேனும் புகார் நிலுவையில் உள்ளதா என்றால்

இல்லை. திருவண்ணமலையில் நான் ஐ.டி.பி.ஐ வங்கியில் கணக்கு வைத்திருந்தேனா என்றால் சரிதான். அந்த வங்கிகணக்கு சேமிப்பு கணக்காகும். இப்போது அந்த வங்கி கணக்கு நடைமுறையில் உள்ளதா என்றால் நான் அதை பயன்படுத்தவில்லை. திருவண்ணாமலையில் வேறு ஏதும் வங்கி கணக்கு உள்ளதா என்றால் இல்லை. **எதிரி வீரய்யாவும் அவர் மனைவி இந்திராவும் 25.09.2024 என்ற தேதியில் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றாலும் அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் என்னிடம் காட்டப்படுவது தான் அது என்றாலும் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு கு.சா.த.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கறிஞர் அறிவிப்பில் இந்திராவின் காசோலை எண்கள் 695549 மற்றும் 695554 குடியாத்தம் ஸ்டேட் பேங்க் காசோலைகள் எதிரி வீரய்யா காசோலைகள் 110567 மற்றும் ஒரு காசோலை குடியாத்தம் ஆக்சிஸ் பேங்க் ஆகியவற்றை நான் வாங்கி வைத்திருப்பதாகவும் அதை நான் சட்டவிரோதமாக பயன்படுத்த கூடாது என்றும் அதில் இருந்தது என்றாலும் சரிதான்.** மேற்படி அந்த சட்டஅறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு ஏதேனும் அனுப்பி உள்ளேனா என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் தாக்கல் செய்துள்ளேன். நான் அதுபோன்று பதில் அறிவுப்பு அனுப்பவில்லை என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. 25.09.2024 தேதிக்கு முன்னர் எதிரி வீரய்யா மீதும் அவரது மனைவி இந்திரா மீதும் மேற்படி காசோலைகளுக்கான எவ்வித சட்டநடவடிக்கைகளும் எடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரிதான். 18.09.2024 ம் தேதியில் காசோலையை வங்கியில் செலுத்த சொன்னார்கள் செலுத்தினேன். வழக்கிறஞர் அறிவிப்பை நான் எப்போது அனுப்பினேன் என்றால் 09.10.2024. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது வேலை செய்யவில்லை இதற்கு முன் SBI லைப் இன்சுரன்ஸ் வேலை செய்து கொண்டுருந்தேன். எந்த கிளையில் வேலை செய்தேன் என்றால் வாணியம்பாடி கிளையில் வேலை செய்தேன். எதிரி வீரய்யா என்ன வேலை செய்கிறார் என்றால் ஜீஸ் கடை வைத்துள்ளார். அவருடைய மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் தற்போது இல்லதரசி , அதற்கு முன் லைப் இன்சுரன்ஸ்சில் ஏஜென்டாக வேலை

செய்துக்கொண்டிருந்தார். எதிரி வீரய்யா தொழிலுக்கும் நான் செய்துக்கொண்டிருந்த தொழிலுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். எதிரி வீரய்யா உடன் தனிப்பட்ட முறையில் பழக்கம் இல்லை என்றால் சரிதான். அவர் மனைவி முலம் தான் எனக்கு பழக்கம். எதிரி இந்திராவை எனக்கு யார் அறிமுகம் செய்து வைத்தார்கள் என்றால் ஏஜென்ட் வேண்டும் என்பதற்காக விளம்பரம் கொடுத்திருந்தேன் அதன் மூலம் எனக்கு தெரியும். அவரை நான் எப்போது சந்தித்தேன் என்றால் ஜீன் 2022 ம் வருடம். ஜீன் 2022 வருடத்திற்கு முன் எதிரி வீரய்யாவையும் அவரது மனைவி இந்திராவையும் எனக்கு யார் என்று தெரியாது என்றால் சரிதான். எதிரியின் சொந்த ஊர் கமுதி, ராமநாதபுரம் மாவட்டம். நான் சொல்வது போல் ஊரே ராமநாதபுர மாவட்டத்தில் இல்லை என்றால்அவர்கள் என்னிடம் கொடுத்த ஆதார்அட்டையில் உள்ளது. எதிரிகள் இருவரும் எத்தனை வருடமாக குடியாத்ததில் வசித்து வந்தார்கள் என்றால் 12 வருடம் என்று சொன்னார்கள். எதிரிகளுக்கு தாய், தந்தை இருக்கிறார்களா என்றால் வீரய்யா குடும்பத்தை பற்றி தெரியாது,இந்திராவின் தாய் மட்டும் தெரியும். எதிரிகளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று ஆண் குழந்தைகள். 2022 முதல் சுமார் எத்தனை முறை எதிரிகளை சந்தித்திருப்பேன் என்றால் ஏஜென்ட் வேலை சம்மந்தமாக சுமார் 10 முறை பார்த்திருப்பேன்.எதிரிகளுக்கு சொத்துகள் பற்றியும் அவர்களின் வசதி முறை பற்றியும் எனக்கு தெரயுமா என்றால் தெரியாது. எதிரிகளின் வீடு சொந்தவீடா வாடகை வீடா என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.SBI லைப் இன்சூரன்ஸ் வேலை செய்வதற்கு முன் என்ன வேலை செய்தேன் என்றால் லைப் இன்சூரன்ஸ் வேலை தான் செய்து வந்தேன். எத்தனை வருடமாக லைப் இன்சூரன்ஸ் வேலை செய்துவருகிறேன் என்றால் 12 வருடம். ஏன் வேலை விட்டுவிட்டேன் என்றால் எனது குழந்தைகளின் கல்விக்காக விட்டேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், SBI லைப் இன்சூரன்ஸ் வேலை செய்த நிறுவனத்தில் சுமார் 10 நபர்களிடம் கோடிக்கணக்கில் மோசடி செய்துள்ளதாக என்னை வேலை விட்டு நீக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. வருமான வரி கட்டுகிறேனா என்றால் இல்லை. நான் வேலை செய்த போது எவ்வளவு எனக்கு சம்பளம் என்றால் மாதத்திற்கு பிடித்தம் போக 28,000 ரூபாய். என்னுடைய வங்கிகணக்கில் தோராயமாக

மாதத்திற்கு பண பரிவர்த்தனை செய்வேன் என்றால் முகவர் வேலையில் இருந்ததால் ரூபாய் 5 லட்சம் வரை செய்வேன். **STC 470/2024 இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்படும் காசோலையை நான் எந்த வங்கியில் தாக்கல்செய்தேன் என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா. (இந்த கேள்வி கேட்ட பிறகு சாட்சி யோசித்து எனக்கு வாணியம்பாடியில் கரூர் வைசியா பேங்கில் வங்கி கணக்கு உள்ளது அதை சொல்ல மறந்துவிட்டேன் என்று கூறினார்). STC 470/2024 இந்திரா சம்மந்தப்பட்ட வழக்கு அதனால் தான் நான் கரூர் வைசியா பேங்க் என்று கூறினேன் என்று சாட்சிக் கூறினார்.** எனக்கு வங்கி பரிவர்த்தனை நடைமுறைகள் நன்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி வீரய்யாவிற்கு கைமாறாக கொடுத்ததாக சொல்லப்படும் பணம் ஒன்பது லட்சம் எப்படி வந்தது என்றால் அது என்னுடைய சேமிப்பு பணம். எதிரிக்கு இந்திராவிற்கு கைமாறாக கொடுத்ததாக சொல்லப்படும் பணம் ஒன்பது லட்சம் எப்படி வந்தது என்றால் அது என்னுடைய சேமிப்பு பணம். எதிரி வீரய்யாவிற்கு கொடுத்த பணமே திரும்ப வராத நிலையில் எதிரி இந்திராவிற்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய்யான தகவல் என்றால் சரியல்ல. நான் எதிரிகள் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அதை உறுதிப்படுத்தும் நிலையில் அதற்கான சாட்சிகள் யாரேனும் உள்ளார்களா என்றால் அவர்கள் கணவர் , மனைவி இருவரும் தான் சாட்சி. **எதிரி வீரய்யாவின் காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் அவரே தான் பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னால் கையொப்பம் இட்டு கொடுத்தார்.** எதிரி இந்திராவின் காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் அவரே தான் பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னால் கையொப்பம் இட்டு கொடுத்தார். STC 470/2024 வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் எதிரியின் வீட்டில் வைத்து ரூபாய் எட்டு லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் ஆமாம், வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். STC 469/2024 வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் மூன்றாவது பத்தியில் எதிரியின் வீட்டில் வைத்து ரூபாய் ஒன்பது லட்சம் கொடுத்ததாக உள்ளது என்றால் ஆமாம், வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். 18.09.2024 ம் தேதியில் எதிரிகளின் வீட்டிற்கு சென்று காசோலையை கேட்ட போது அவர்கள் வீட்டில் வைத்து கொடுத்து காசோலையை

கொடுத்தார்களா என்றால் இல்லை, **18.09.2024 ம் தேதியில் எதிரிகள் தான் காசோலையை பூர்த்தி செய்து என் வீட்டிற்கு வந்து என் முன்னால் கையொப்பம் செய்து கொடுத்தார்கள்.** நான் எதிரிகளை அவர்கள் வீட்டில் போய் சந்தித்ததாக சொல்லப்படும் தேதி என்னவென்றால் ஆகஸ்ட் மாதம் 30 ம் தேதி. எதிரி இந்திராவின் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கிகணக்கிற்கு எதாவது பண பரிவர்த்தனை நடந்துள்ளாதா என்றால் நடந்திருக்கிறது. என்னுடைய எந்த வங்கி கணக்கிற்கு பண பரிவர்த்தனை நடந்தது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையில் நடந்துள்ளது. **எதிரி இந்திரா என் மீது வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 29.08.2024 ம் தேதி புகார் கொடுத்துள்ளார் என்றாலும் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான். விசாரணை முடிவு என்னவென்றால் நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்கிறோம் என்று வந்துவிட்டோம். எதிரி இந்திரா மேல் திருப்பத்தூர் மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்தில் காசோலை கொடுத்து பணம் வாங்கிக்கொண்டு போனதாக புகார் அளித்தேன் என்றாலும் அதன் பேரில் அவர்களை அழைத்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான்.அந்த புகாரின் மீது என்ன முடிவு என்றால் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்ளும் படி கூறிவிட்டார்கள்.** இன்றைய தினத்தில் இருந்து சுமார் 15 நாட்கள் முன்பு வேலூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கூறிய புகார்கள் அனைத்தும் முடிவுக்கு வரவில்லை என்றாலும் நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது அதனால் முடிவுக்கு வரவில்லை. நான் திருப்பத்தூர் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் எதிரி இந்திராவின் மீது கொடுத்த புகாரின் மீது விசாரணை செய்ய 16.09.2024 ம் தேதி அன்று எதிரி இந்திராவை வரசொல்லி அழைப்பானை அனுப்பியநிலையில் எத்தனை நாட்களுக்கு முன்பு நான் எதிரியின் மீது புகார் கொடுத்தேன் என்றால் 10.09.2024. செப்டம்பர் 2024 முதல் இதுநாள் வரை போலிஸ் புகார் என விரோதமாக போய்விட்டதால் நானும் எதிரிகளும் சந்திக்கவில்லை என்றால் சரிதான், புகார் கொடுத்தற்கு பின்பு ஒரே ஒரு முறை அவர்கள் என் வீட்டிற்கு வந்து பார்த்தார்கள். நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றாலும் இருவரும் போலிஸ் புகாருக்கு பிறகு சந்தித்தாக சொல்வது

சாத்தியமில்லை என்றால் சரியல்ல. எதிரி இந்திரா 23.09.2024 ம் தேதி வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், குடியாத்தம் நகர காவல் நிலையத்திலும், குடியாத்தம் மாவட்ட துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் மோசடி செய்தது சம்மந்தமாக என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான், லைப் இன்சுரன்ஸ் சம்மந்தமாக தான் கேட்டார்கள். எதிரி இந்திரா என்பவர் என் பேரிலும் என் தோழி குடியாத்தம் கோமளா என்பவர் பேரிலும் திருப்பத்தூர் மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில் அழைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை. புகார் கொடுத்தார்கள் என்றாலும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. 27.09.2024 ம் தேதி அன்று நான் எதிரி வீரய்யாவின் காசோலை எண். 110567, எதிரி இந்திராவின் காசோலை எண். 695554 மற்றும் 695549 சட்டவிரோதமாக வாங்கியதை மீட்டு தரும்படி வேலூர் SP , குடியாத்தம் DSP, குடியாத்தம் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் , வாணியம்பாடி நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர், வாணியம்பாடி DSP, திருப்பத்தூர் SP ஆகிய அதிகாரிகளுக்கு பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பினார்கள் என்றாலும் நான் என் பணபலத்தை பயன்படுத்தி மேற்படி புகாரை விசாரிக்காதபடி செய்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி புகார் அனைத்தும் வேலூர் மாவட்ட குற்றப்பிரிவுக்கு அனுப்பபட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், காசோலை மோசடி வழக்கிற்காக நிலுவையில் இல்லை, இன்சுரன்ஸ் சம்மந்தமாக தான் நிலுவையில் உள்ளது. மேற்படி இரண்டு காசோலை வழக்குகளும் நிலுவையில் உள்ளது என்பதை குறிப்பிட்டு அதை நாங்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்வதாக வக்கீல் நோட்டிஸ் அனுப்பியுள்ளேனா என்றால் சரிதான், அதை நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதால் அனுப்பினேன். மேற்படி இன்சுரன்ஸ் சம்மந்தப்பட்ட புகார் நிலுவையில் உள்ள நிலையில் காசோலை குறித்து வக்கீல் நோட்டிஸ் அனுப்ப காரணம் என்னவென்றால் அவர்கள் செய்த காசோலையை மோசடியை மறைப்பதற்காக என் மீது தேவையில்லாத புகார்களை பதிவு செய்து வந்த காரணத்தினால் வழக்கறிஞர் மூலம் அவர்களுக்கு காசோலை குறித்து அறிவிப்பு அனுப்பினேன். STC 469/2024 ன் வழக்கின் காசோலை தேதி 09.10.2024, STC 470/2024 ன் வழக்கின் காசோலை தேதி 09.10.2024. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

தேதி தெரியுமா என்றால் 15.11.2024. என் தோழி குடியாத்தம் கோமளா அவர்களுக்கும் முன் அனுபவம் உள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் நான் தற்போது அதே பாணியில் குடியாத்தம் பகுதியில் வசிக்கும் 14 நபர்களிடம் ரூ.1.5 கோடி பணமோசடியில் ஈடுபட்டு விட்டு அதன் பின் போலிசார் எடுக்கும் நடவடிக்கையில் இருந்து தப்பிக்க நானும் என் தோழி கோமளாவும் தப்பிக்க தந்திரமாக இரு எதிரிகளையும் ஏமாற்றி முன்னதாகவே இவ்வழக்கு காசோலைகளை வெற்றாக வாங்கி வைத்திருந்து தற்போது எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்திற்காக இந்த காசோலைகளை கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் வாங்கியதாக சொல்லும் பணத்திற்காக இந்த காசோலைகளை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, என்னிடம் வாங்கிபணத்திற்காக தான் காசோலையை கொடுத்தார். நானும் என் தோழி கோமளாவும் நயவஞ்சகமாக ஏமாற்றி மேற்படி இரு வழக்கு காசோலைகளை வாங்கிவிட்டோம் என்றாலும் அதனால் எதிரிகள் போலிசாரிடம் புகார் அளித்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி இரு வழக்கு காசோலைகளை நயவஞ்சகமாக வாங்கி இருப்பதால் சட்டப்படி காசோலைகளை கையில் வைத்திருப்பவர் என்ற வரையறைக்குள் வராது என்றால் சரியல்ல, அவர்களாகவே தான் கொடுத்தார்கள். எதிரிகளின் காசோலைகளை சட்டவிரோதமாக வாங்கி அவர்களின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்து நான் தான் அவர்களுக்கு நம்பிக்கை மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இருவழக்கின் காசோலை தொகைகளை எதிரிகள் எனக்கு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும் அவர்களின் வங்கி கணக்கில் இருந்து என் வங்கி கணக்கிற்கு வந்துள்ள தொகையை நான் தான் அவர்களுக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நீதிமன்ற நடவடிக்கைகை என்னுடைய சட்டவிரோத செயலுக்கு தவறாக பயன்படுத்தியதால் என் மீது தான் குற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. இராமநாதபுரத்தில் இருந்து பிழைப்பு தேடி குடியாத்தம் வந்த ஏழ்மை நிலையில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் எதிரிகளை திட்டம் போட்டு நானும் என் தோழி கோமளாவும் ஏமாற்றிவிட்டோம் என்றால் சரியல்ல. என்னுடைய தோழி கோமளா இன்று

நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் மாற்றுமுறை ஆவணச்சட்டப்படி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் இருந்து எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. நானும் என் தோழி கோமளாவும் தொடர்ச்சியாக மேற்படி குற்றசெயலில் ஈடுபட்டு வருவதால் நாங்கள் தான் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல, நான் எந்த தவறும் செய்யவில்லை." என சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

8. **குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமாணங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ.பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு **(preponderance of Probabilities)** ஆகும்.

9. இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளாரா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

10. இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

11.குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் செலுத்தவில்லை, தவறான விவரங்களுடன் பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், எனவே குற்றமுறையீட்டாளர் உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல்

செய்திருப்பதாகவும், புகார்தாரரின் மீது பல பண மோசடி வழக்குகள் இருப்பதாகவும், குற்றம்சாட்டபட்டவரிடம் SBI லைஃப் இன்சூரன்ஸ் நிறுவத்தில் சேர்ந்தால் பணம் சம்பாதிக்கலாம் என கூறி மோசடி செய்ததாகவும், இந்திரா மற்றும் குற்றம்சாட்டப்பட்டவரின் பாரத ஸ்டேட் வங்கியின் காசோலைகளான 695549, 695554 ஆக்ஸிஸ் வங்கி குடியாத்தம் வங்கியின் காசோலைகளை வாங்கிக் கொண்டதாகவும், வெற்று காசோலைகளை வாங்கிக் கொண்டு எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

13(i). இவ்வழக்கின் குற்றமுறையிடுபவரான ஜெயந்தி என்பவரிடமிருந்து குடும்ப மற்றும் வியாபார தேவைக்காக கடந்த 2023 செப்டம்பர் மாத முதல் வாரத்தில் ரூ.9,00,000ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதை 6 மாதத்தில் திரும்ப செலுத்துவதாக கூறியதாகவும், கடந்த 18.09.2024ம் தேதி பணத்தை திரும்ப கேட்டபோது 18.09.2024ம் தேதியிட்ட ஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளை. காசோலை எண் 110567 என்ற காசோலையை ரூ.9,00,000/–த்திற்கு கொடுத்ததாகவும் அந்த காசோலையை 18.09.2024ம் தேதி பாரத ஸ்டேட் வங்கி, வாணியம்பாடி கிளையில்வசூலுக்கு செலுத்தியதாகவும், மேற்படி காசோலை குற்றம் சாட்டப்பட்டவரின் வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லை (Funds insufficient) என்று காசோலையானது 19.09.2024ம் தேதி ரிட்டன் மெமோவுடன் திருப்பப்பட்டது என்றும், மேற்படி விவரத்தை 09.10.2024ம் தேதி அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை அனுப்பியதாகவும், அதை 15.10.2024ம் தேதி பெற்றுக்கொண்டு 18.10.2024ம் தேதி தவறான விவரங்களுடன் பதிலறிவிப்பு அனுப்பியதாகவும், இதுவரை காசோலை தொகையை கொடுக்கவில்லை என்பதும்,

மேலும் 18.09.2024ம் தேதியிட்டஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளையின் 110567 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/–க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்பதும், 19.09.2024ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்பதும், 09.10.2024ம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது பு.த.சா.ஆ.3 என்பதும், 15.10.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.4 என்பதும், 18.10.2024 ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு பு.த.சா.ஆ.5 என்பதும், அறிவிப்பு பெற்றுக் கொண்ட பிறகும் இன்றைய தேதி வரையிலும் காசோலைக்குண்டான தொகையை குற்றமுறையீட்டாளருக்கு அளிக்கவில்லை என்பதும், எனவே குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13(ii). மேலும், புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் " எதிரி வீரய்யாவிற்கு நம்பிக்கையின் அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றும், எதிரி வீரய்யாவின் சாசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் அவரே பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னால் கையொப்பம் இட்டு கொடுத்தார் என சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் பு.த.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளார் என்றும், 18.09.2024ம் தேதியிட்டஆக்சிஸ் வங்கியின் காசோலையை, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, வாணியம்பாடி கிளையில் வசூலுக்கு போட்டபோது என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் குற்றம்சாட்டப்பட்டவர் கணக்கில் **"போதிய பணம் இல்லை"** என்ற காரணத்திற்காக 19.09.2024ம் தேதியில் திருப்பப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக பு.த.சா.ஆ.2ஐ தாக்கல் செய்துள்ளார். கடனை திருப்பி கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாக சொல்லியுள்ள நிலையில் பு.த.சா.ஆ.3 மற்றும் பு.த.சா.ஆ.4 ஐயும், எதிரி அதனை

பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பியதை நிரூபிக்கும் வகையில் பு.த.சா.ஆ.5 ஐ தாக்கல் செய்துள்ளார் என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேலும், எதிரி காசோலையில் உள்ள கையெழுத்தையும் அந்த காசோலை அவருடைய கணக்கிற்குரியது என்பதையும் மறுக்கவில்லை. எனவே மாற்று முறை ஆவணசட்டப் **பிரிவு 118 மற்றும் 139–ன் படி அந்த காசோலை சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காகவே வழங்கப்பட்டது என்ற சட்ட அனுமானம்(Statutory presumption) புகார்தாரரருக்கு சாதகமாக உருவாகிறது**. எனவே, இவ்வழக்கில் புகார்தாரர் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13(iii). **சட்டப்பிரிவு 139ன் கீழ் புகார்தாரர் ஒரு காசோலையை கடனை தீர்ப்பதற்காகவே பெற்றார் என்று நீதிமன்றம் கருதவேண்டும். இதை பொய் என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden Of Proof) குற்றம் சாட்டப்பட்டவரையே சாரும்.**

13(iv). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் கு.சா.த.ஆ.1 மற்றும் கு.சா.த.ஆ.2 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுத்துள்ளார்களா?

15 . புகார்தாரர் எதிரியிடமிருந்து ஏமாற்றி காசோலைகளை பெற்றுக்கொண்டதாக எதிரி தரப்பு பதில் அறிவிப்பில் கூறியுள்ள நிலையில் அதனை நிரூபிக்கும்பொருட்டு எதிரி தரப்பின் சாட்சிகள் மற்றும் சான்று ஆணவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா ?

இவ்வழக்கில் காசோலையானது புகார்தாரரிடம் எதிரி லைப் இன்சூரன்ஸ் வேலை செய்யும்போது பணம் பெற்று தருவதாக கூறி மோசடி செய்ததாகவும், மேலும் அதற்காக புகார்தாரர் அந்த காசோலைகள் வாங்கியதாக பதில் அறிவிப்பில் சொல்லியுள்ள நிலையில், அதற்கு ஆதரவாக எந்த ஒரு ரசீதோ, ஒப்பந்தமோ அல்லது ஆவணபூர்வமாண ஆதாரங்களோ (Documentary evidence) எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

15(i) **"எதிரி வீரய்யாவும் அவர் மனைவி இந்திராவும் 25.09.2024 என்ற தேதியில் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றாலும் அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் என்னிடம் காட்டப்படுவது தான் அது என்றாலும் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு கு.சா.த.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கறிஞர் அறிவிப்பில் இந்திராவின் காசோலை எண்கள் 695549 மற்றும் 695554 குடியாத்தம் ஸ்டேட் பேங்க் காசோலைகள் எதிரி வீரய்யா காசோலைகள் 110567 மற்றும் ஒரு காசோலை குடியாத்தம் ஆக்சிஸ் பேங்க் ஆகியவற்றை நான் வாங்கி வைத்திருப்பதாகவும் அதை நான் சட்டவிரோதமாக பயன்படுத்த கூடாது என்றும் அதில் இருந்தது என்றாலும் சரிதான்."** என புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் கூறியதால் எதிரி தரப்பு கு.சா.த.ஆ.2ஐ நீதிமன்றம் கவனமாக பரிசீலணை செய்து பார்த்தபோது அந்த அறிவிப்பானது புகார்தாரர் தரப்பு பு.த.சா.ஆ.2 ஆன ரிட்டர்ன் மெமோவின் மூலம் எதிரியின் காசோலை திருப்பப்பட்ட பிறகே அது போன்ற ஒரு அறிவிப்பு புகார்தாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. சட்டபடி ஒரு நபர் தன் காசோலை தவறாக பயன்படுத்தப்படுகிறது என அறிந்த உடனோ அல்லது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபரிடம் காசோலை வழங்கப்பட்டுள்ளது என தெரிந்த உடன் உடனடியாக சட்டபூர்வ நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். வழக்கு தொடரப்பட்ட பின்னர் அனுப்பப்பட்ட இந்த கு.சா.த.ஆ.2 ஆன அறிவிப்பு, வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக புனையப்பட்ட ஒரு " பின்விளைவு யோசனையாக" இருக்குமோ என நீதிமன்றம் அனுமானிக்கிறது. மேலும், எதிரியின் உடைய மனைவி இந்திரா என்பவர்தான் கு.சா.த.ஆ.2 ஆன அறிவிப்பை புகார்தாரருக்கு அனுப்பியுள்ளாரே தவிர

எதிரி வீரைய்யா என்பவர் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. மேலும் எதிரியின் மனைவி இந்திரா இந்த வழக்கின் புகார்தாரர் ஆன ஜெயந்தி தாக்கல் செய்திருக்கும் STC 470/2024 என்ற வழக்கின் எதிரி என்பதும் குறிப்பிடதக்கது. அந்த அறிவிப்பின் நகல் கு.சா.த.ஆ.2ஐ பரிசீலணை செய்து பார்க்கும்போது அந்த அறிவிப்பில் காசோலையை பயன்படுத்த கூடாது என்றும் எதிரி (Stop Payment) செய்யச் சொல்லி வங்கிக்கு அறிவுறுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கில் எதிரி அது போன்று Stop payment செய்யச் சொன்னதாக எவ்வித சான்றாவணமோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இவ்வழக்கின் காசோலை போதிய பணம் இல்லை (Funds insufficient) என்றுதான் திருப்பப்பட்டுள்ளதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்திருக்கும் கு.சா.த.ஆ.2 ஆன அறிவிப்பு நகல் இவ்வழக்கிற்கு போதுமான சான்றாவணமாக அமையவில்லை என நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கில் புகார்தாரர் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

எதிரி தரப்பில் தாக்கல் செய்திருக்கும் **கு.சா.த.ஆ.1ஆன திருவண்ணாமலை மாவட்டம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்–1 கொடுத்த தீர்ப்பை** பரிசீலணை செய்து பார்க்கும்போது புகார்தாரர் அந்த வழக்கில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்ட்டது தெரியவருகிறது. ஆனால் அந்த தீர்ப்பு ஒன்றே இந்த வழக்கின் தன்மையையோ காசோலை வழங்கப்பட்ட சட்டபூர்வ கடமையையோ கட்டுப்படுத்தாது.

15(ii) **குற்ற பின்னணி என்ற வாதம் சட்டபடி செல்லாதது (Bad character evidence is irrelavent)**

"எதிரி இந்திரா என் மீது வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 29.08.2024 ம் தேதி புகார் கொடுத்துள்ளார் என்றாலும் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான். விசாரணை முடிவு என்னவென்றால் நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்கிறோம் என்று வந்துவிட்டோம். எதிரி இந்திரா

மேல் திருப்பத்தூர் மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்தில் காசோலை கொடுத்து பணம் வாங்கிக்கொண்டு போனதாக புகார் அளித்தேன் என்றாலும் அதன் பேரில் அவர்களை அழைத்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான்.அந்த புகாரின் மீது என்ன முடிவு என்றால் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்ளும் படி கூறிவிட்டார்கள். " என புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் எதிரியின் மனைவி புகார்தாரரின் மீது புகார் கொடுத்துள்ளதாகவும், அதனால் இந்த வழக்கையும் மோசடியாக தாக்கல் செய்துள்ளார் என்றும், அவர் மீது பல குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்ட நிலையில் புகார்தாரர் மீது வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது என்ற வாதம் இந்த வழக்கிற்கு தொடர்பற்றது என்றும், ஒவ்வொரு காசோலை வழக்கும் அதன் தனிப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படவேண்டும் என்றும் புகார்தாரரின் மீது வழக்கு நிலுயையில் உள்ளதாக புகார்தாரரே ஒப்புக்கொண்டிருந்தாலும் புகார்தாரரின் முந்தைய பின்னணியை வைத்து இந்த வழக்கின் கடப்பாட்டை எதிரி மறுக்க முடியாது என்றும் அந்த வழக்குகளை மட்டும் இந்த வழக்கு மோசடியாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என நீதிமன்றம் முடிவுக்கு வர முடியாது எனவும் அந்த வழக்குகள் இந்த வழக்கின் உண்மை தன்மையை எந்த வகையிலும் பாதிக்காது என நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரி தன் மீதான சட்டபூர்வ அனுமாத்தை தகர்க்க தவறிவிட்டதால் **குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி ஆவணங்கள் புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுக்கவில்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.**

15(iii). காசோலையில் உள்ள கையொப்பத்தை குற்றம் சாட்டப்பட்டவர் ஒப்புக்கொண்டால் பிரிவு 139ன் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் அந்த காசோலை ஒரு சட்டபூர்வமான கடனுக்காகதான என்ற அனுமானம் **(Presumption)** தானகவே உருவாகிறது. அந்த அனுமானத்தை மறுக்க குற்றம்சாட்டப்பட்டவர் வெறும் கதைகளை சொல்லாமல் **"சாத்தியக்கூறுகளின் முன்னுரிமை" (Preponderance of probilities)** அடிப்படையில் வலுவான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும்,

15(iv). **இவ்வழக்கில் காசோலையில் உள்ள கையொப்பத்தை குற்றம் சாட்டப்பட்டவர் மறுக்காத பட்சத்தில் புகார்தாரர் அந்த காசோலையின் சட்டபூர்வமான உரிமையாளர் (Holder in due course) ஆவார். இவ்வழக்கில் எதிரி தரப்பில் காசோலையில் உள்ள கையொப்பத்தையோ காசோலையோ மறுக்கவில்லை. குற்றம்சாட்டப்பட்டவருடையது அல்ல என்று நிரூபிக்க தவறிவிட்டது.**

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் பிரிவு 139 ன் கீழ் எதிரிக்கு சாதகமான அனுமானத்தை பொய்ப்பிக்க தவறிவிட்டது.

16. " Omnia Praesumuntur rite et solenniter esse acta " (அனைத்து அரசு அல்லது அதிகாரப்பூர்வ செயல்களும் முறையாகவும், சரியாகவும் செய்யப்பட்டதாகவே கருதப்படும்.)

16(i). மேலும், வங்கியின் ரிட்டர் மெமோ என்பது ஒரு முறையான ஆவணம் என்பதால் குற்றமுறையிடுபவர் தரப்பில் பு.த.சா.ஆ.2ஐ முறையான ஆவணமாக நீதிமன்றம் கருதுகிறது. பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர் தனது தற்காப்பை நிரூபிக்க தவறிவிட்டார் என்பதாலும், போதிய அவகாசம் கொடுத்தும் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்யவில்லை. எனவே, குற்றம்சாட்டப்பட்டவரின் தரப்பு சாட்சியம் வலுவிழந்து விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. மேலும், குற்றம் சாட்டப்பட்டவரிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு அவங்க தான் எனக்கு ரூ.34,00,000 தரனும். அதற்கான ஸ்டேட்மென்ட் இருக்கு ஆதாரம் இருக்கு எனவும், ஒரு காசோலை லோன் வாங்கி தருகிறேன் என கூறி 1110597 காசோலை வாங்கினார். மற்றொரு காசோலையை இன்சுரன்ஸ் வாங்கி தருகிறேன் என கூறி வாங்கினார். 1110568 இந்த காசோலையை சௌந்தரராஜனிடம் கொடுத்துள்ளார் ஜெயந்தி எனவும், அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்

அதை மறுக்கும் விதமாக சான்றாவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், ஸ்டேட்மென்ட் மற்றும் இன்சுரன்ஸ் போட்டதற்கான சான்றாவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம் திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.** மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்படவரின் கடமை என கூறுகிறது.

17(i). ஆனால், எதிரி தனது முதல் கேள்வியில் குற்றம் குறித்து வினாவிய போது பொய் வழக்கு போட்டுள்ளார்கள், குற்றவாளி இல்லை என்று கூறியுள்ளாரே தவிர பணம் வாங்கவில்லை என்றோ, காசோலையை கொடுக்கவில்லை என்றோ மறுத்து கூறவில்லை என்பதாலும், இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரால் தான் காசோலையானது புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் காசோலையானது எதிரி வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. அந்த அனுமானத்தை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மறுத்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர் தனது கடமையை தவறவிட்டதாகவே நீதிமன்றம் கருதுகிறது.

17(ii). குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை, குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்

மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

17(iii). மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கபட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

18. இவ்வழக்கில் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றஞ்சாட்டபட்டவர் குற்றவாளி என தீர்மானிக்கபட்டதினால் குற்றமுறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதி உடையவர் ஆவார். வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், குற்றமுறையீட்டாளருக்கு காசோலை தொகையான ரூ. 9,00,000 + செலவுத் தொகை ரூ.10,000/- மொத்தம் ரூ.9,10,000/-த்தை இழப்பீடாக குற்றமுறையீட்டாளருக்கு வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

19. முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.9,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.9,10,000/- குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க

வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் ஜூன் மாதம் 24 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–கா.ஶ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>இணைப்புகள்</u>

<u>குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்</u>

1.	பு.த.சா.1	திருமதி.ஜெயந்தி

<u>குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்</u>

1.	பு.த.சா.ஆ.1	18.09.2024ம் தேதியிட்டஆக்சிஸ் வங்கி, குடியாத்தம் கிளையின் 110567 என்ற எண்ணுள்ள ரூ.9,00,000/–க்கான காசோலை அசல்.
2.	பு.த.சா.ஆ.2	19.09.2024ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ .
3.	பு.த.சா.ஆ.3	09.10.2024ம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது
4.	பு.த.சா.ஆ.4	15.10.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை.
5	பு.த.சா.ஆ.5	18.10.2024 ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு.

<u>குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி</u> – இல்லை.

<u>குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

1.	கு.சா.த.ஆ.1	திருவண்ணாமலை மாண்புமிகு குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–1 நீதிமன்றத்தில் CC 167/2022 என்ற வழக்கின் தீர்ப்பு.
2.	கு.சா.த.ஆ.2	அறிவிப்பு.

குறிப்பு

- வழக்கில் தீர்ப்பு பகரப்பட்டபோது எதிரி ஆஜர் ஆகாததால் அவர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒம்/–கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.